செ.வெ.எண்: 56 நாள்:28.08.2021

<u>பத்திரிக்கை செய்தி</u>

**இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சியளிக்க தகுதியுள்ள நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் மகளிர் திட்டம் மூலம் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டிற்கான வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற்திறன் பயிற்சி ESTP - (Employment Through Skill Training & Placement) நடத்திட அனுபவம் வாய்ந்த தகுதியுள்ள பயிற்சி நிறுவனங்களிடமிருந்து கருத்துருக்கள் வரவேற்கப்படுகின்றன.

<u>விண்ணப்பிக்கும் நிறுவனங்களுக்கான தகுதிகள்:</u>

- பயிற்சி நிறுவனமானது SMART/Skill India Portal-NSDC மூலம் பயிற்சி நடத்த அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்.
- PMKK (Pradhan Mandri Kaushal Kendra) திட்டத்தில் பயிற்சி நடத்த அனுமதி பெற்ற பயிற்சி நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- ஏற்கனவே அரசு துறை சார்ந்த திட்டங்களில் பயிற்சி அளித்த நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- பயிற்சி கூடமானது உரிய கட்டமைப்பு வசதிகளை பெற்றிருக்க வேண்டும்.

கருத்துருக்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 07.09.2021 அன்று மாலை 5.00 மணிக்குள் நேரிலோ தபாலிலோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

<u>விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய முகவரி:</u>
திட்ட இயக்குநர்,
மகளிர் திட்டம்,
ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி துறை அலுவலக வளாகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகப்பட்டினம் - 611 003.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**